அ.வ.எண்: 20/2017 நாள்: 08.04.2026

வா.சா.2 – பாப்பு

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக எனக்கு பார்வை தெரியாது என்றால் சுமார் 20,30 ஆண்டுகளாக எனக்கு பார்வை தெரியாது. தாவா வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் நான்தான் தாக்கல் செய்தேன். தாவா வழக்கில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தை எனக்கு யார் படித்து காண்பித்தது என்றால், எனது வழக்கறிஞர் தான் படித்துக் காண்பித்தார். அதன் பின்பு தான் நான் கைரேகை வைத்தேன். நான் தாவா வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொன்னாத்தாள் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் பொன்னாத்தாள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. தாவா வழக்கை எத்தனை சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 48 செண்டு அளவுள்ள ஒரு சொத்துக்கு தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால், அது எனக்கு பூர்வீக சொத்தாகும். எனது தகப்பனாருக்கு தகப்பனாரின்( தாத்தா) பூர்வீக சொத்து ஆகும். எனது தாத்தா பெயர் முத்து கருப்பன் ஆகும். மேற்படி முத்துக்கருப்பனுக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் அம்மாசி மற்றும் வேலு ஆகிய 2 வாரிசுகள் ஆவர். மேற்படி முத்துக்கருப்பனுக்கு அம்மாசி, வேலு மற்றும் மொக்குசா ஆகிய 3 வாரிசுகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி அம்மாசி எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று பெண் வாரிசுகள். ஆண் வாரிசுகள் இல்லை. நான் தான் மூத்த மகள் என்றால் சரிதான்.

3. எனது தாத்தா முத்துக்கருப்பனின் தகப்பனாரின் பெயர் உடையான் என்றால் சரிதான். மேற்படி உடையானுக்கு அழகன் மற்றும் முத்துகருப்பன் ஆகிய இரு மகன்கள் இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி முத்துக்கருப்பனின் வாரிசுகள் தான் நாங்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மேற்படி அழகனின் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் குடும்பத்தார்களும் வாதி ஆகிய எங்களது குடும்பத்தார்களும் மேற்படி உடையானின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் அழகன் மற்றும் முத்துக்கருப்பனின் தந்தை உடையானுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முத்து கருப்பன் மற்றும் அழகன் ஆகியோருக்கு தாவா சொத்து உட்பட பல பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பூர்விக சொத்துக்களை அழகன் மற்றும்

முத்து கருப்பன் ஆகியோர் பிரித்துக் கொண்டார்களா என்றால் பிரித்துக் கொண்டார்கள்.

4. மேற்படி பாகப்பிரிவினை எழுத்துப்பூர்வமாக எழுதப்பட்டதா அல்லது வாய்மொழியாக பிரித்துக் கொள்ளப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்து கருப்பன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மகன்களான அம்மாசி,வேலு மற்றும் மொக்குசா ஆகியோருக்கு பிரித்துக் கொடுத்துவிட்டாரா என்றால் பிரித்துக் கொடுத்து விட்டார். தாவாசொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக அம்மாசி மற்றும் அழகனுக்கு இடையில் ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாவா சொத்து அழகனுக்கு பாத்தியப்பட்டது என்று உத்தரவு வழங்கப்பட்டது என்றால் இல்லை, எங்களுக்கு பாத்தியம் என்று தான் உத்தரவானது. மேற்படி உத்தரவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. மேற்படி உத்தரவை எதிர்த்து எனது தந்தையான அம்மாசி என்பவர் ராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றும், அந்த மேல்முறையிடும் தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு சொத்து அழகனுக்கு பாத்தியப்பட்டது என்று உத்தரவு ஏற்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது, எங்களுக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு வழங்கப்பட்டது.

5. தாவாசொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. தாவா சொத்து எனக்கு எப்படி பாதிக்கப்பட்டது

என்றால், எனது தாத்தா முத்துக்கருப்பன் மேற்படி சொத்தை அவரது மனைவியான வெள்ளச்சி என்பவருக்கு எழுதி கொடுத்தார். மேற்படி வெள்ளச்சி தாவா சொத்தை எனது தந்தைக்கு பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்து பட்டா மாற்றிக் கொடுத்தார். என் தகப்பனார் பெயரில் இருந்து என் பெயருக்கு சொத்து எப்படி மாற்றப்பட்டது என்றால், நான் மூத்த மகள் அதனால் என் பெயருக்கு சொத்தை மாற்றிக் கொண்டேன். என் தகப்பனாரின் சொத்து அவரது மூன்று மகள்களுக்கும் பாத்தியம் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் தாவா சொத்தை என் பெயருக்கு மட்டும் ஏன் மாற்றிக் கொண்டேன் என்றால், அவர்கள் வேண்டாம் என்று கூறி விட்டார்கள், அதனால் என் பெயருக்கு மாற்றிக் கொண்டேன். என் சகோதரிகள் தாவா சொத்து வேண்டாம் என்று எழுத்துப்பூர்வமாக எழுதிக் கொடுத்தார்களா என்றால் இல்லை.

6. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் பட்டா உள்ளது, பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து உட்பட பல பூர்விக சொத்துக்கள் வாதியாக எங்களது குடும்பத்திற்கும், பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் பொதுவாக பாத்தியப்பட்டது என்றும், அவற்றை முத்துக்கருப்பன் காலத்தின் போது பிரித்துக் கொண்டதால் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் அழகனுக்கு எதிராக எந்த வருடம் ராமநாதபுரத்தில் வழக்கு போட்டார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது தந்தை எப்பொழுது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது.

எனது தந்தை எப்பொழுது தாவாசொத்தை எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. 1994 ஆம் ஆண்டு தான் தாவா சொத்து சம்பந்தமாக ராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு வழங்கினார் என்றால் சரிதான், உத்தரவு எங்களுக்கு சாதகமாக வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவுக்கு பின்னீடு எனது தந்தை எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அழகனுக்கு பாத்தியப்பட்டது என்று மாவட்ட வருவாய் அலுவலகத்தில் தீர்ப்பானதால் தான், அம்மாசி வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கொண்டாடவில்லை என்றும், அதனால் நான் தாவாசொத்தில் உரிமை கொண்டாட இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தபசுராஜ் வெளியூரில் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பொன்னாத்தாள் எங்கு உள்ளார் என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. தாவா வழக்கில் எனக்கு முன்பாக எனது மகள் சுசி வா.சா. 1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

8. தாவா சொத்து சம்பந்தமாக நான் சொன்னதன் அடிப்படையில் தான் எனது மகள் சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான். தாவாசொத்து செட்டில்மெண்ட் காலத்திற்கு முன்பே பிரிக்கப்பட்டதால் அழகன் பெயரில் பட்டா ஏற்பட்டு வந்துள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து சம்பந்தமாக தவறுதலாக என் பெயரில் கணினி பட்டா ஏற்பட்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.08 14:56:19 +0530